1981 மார்ச் 2]

திரு: இரெ, இராசாமாணிக்கம் : தலைவரவர்களே, புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் பெயரால் வழங்கப்படுகின்ற விருது 1980 ஆம் ஆண்டு வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். இந்த ஆண்டாவது வழங்குவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, அரசு முயற்சி எடுக்கும்.

திரு. சி. த. சிதம்பரம் : தலைவரவர்களே, புரட்சிக் கவிஞர் வழிவந்த கவிஞர் முடியரசன் அவர்களுக்கு ரூ. 10,000 பணமும் விருதும் வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே அது, அதற்காக அமைக்கப்பட்டிருக்கின்ற குழு பரிசீலக்க வேண்டியது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவர் விடுதி

* வினா எண் 327—திரு. ப. நெடுமாறன், திரு. என். பழனிவேல் திரு. எஸ். ஆண்டித்தேவர் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மதுரை சட்டக் கல்லூரிக்கு மாணவர்கள் விடுதி கட்ட தமிழக அரசு நடவடிக்கை ஏதும் எடுத்துள்ளதா ?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மதுரை சட்டக் கல்லூரி மாணவர்கள் விடுதிக்காக மதுரை மாவட்டாட்சியர் தல்லாகுளம் பகுதியில் ஏழு ஏக்கர் நிலத்தை ஒதுக்குவதாகக் கூறியுள்ளார். நிலம் ஒதுக்கப்பட்ட பிறகு விடுதி கட்டுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்.

திரு. ப. நெடுமாறன் : அவைத் தலைவரவர்களே, மதுரை சட்டக்கல்லூரி அமைக்கப்பட்டதற்கு பின்னால் அமைக்கப்பட்ட கோவை சட்டக்கல்லூரிக்கு மாணவர் விடுதி கட்டி முடித்தாகி விட்டது. ஆனால் மதுரையிலே மட்டும் இன்னும் மாணவர் விடுதி அமைக்கப்படவில்லை. மதுரைக்கு ஏராளமான கிராமங்களிலிருந்து வருகின்ற மாணவர்கள் தங்கும் வசதி இல்லாமல் அவதியுறுகிறார்கள். ஆகவே, நடப்பாண்டிலேயாவது அந்த மாணவர் விடுதியைக் கட்டி முடிப்பதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. செ, அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையிலே உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு விடுதி கட்டப்பட்டதாக சொல்லப்படுவது உண்மைக்கு மாறானது. அவர்களாகவே ஏதோ கட்டிடத்தை

வாடகைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். திறப்பு விழாவிற்குக் கூட அழைப்பு அனுப்பினார்கள். ஆனால் நான் போகவில்லை. அதற்கான விடுதி கட்டியதற்குப் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று சொல்லிவிட்டேன். மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கும் விடுதி கட்டுவதற்கான முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறோம். இடம் கிடைத்ததும் கட்டுவதற்கான வேலைகள் தொடங்கப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விடுதி கட்டுவதற்கான இடம் ஒதுக்குவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்த இடம் ஒதுக்கப்பட்டு விட்டதா? அல்லது பரிசீலனையில் இருக்கிறதா? பரிசீலனையில் இருக்கிறது என்றால் பல ஆண்டுகள் கூட ஆனாலும் ஆகலாம். அதுவரை அக் கல்லூரி மாணவர்கள் வேறு பல இடங்களிலே போய் தங்கி அங்கிருந்து கல்லூரிக்கு வர போக்குவரத்து வசதிகூட இல்லாமல் அவதிப்படும் நிலை இருப்பதால் உடனடியாக அரசாங்கம் தனி வீடுகளை வாடகைக்கு எடுத்தாவது அதற்கு ஏற்பாடு செய்ய முன்வருமா ? அத்தோடு இடம் கிடைத்தவுடன் அதை சீக்கிரமாகக் கட்டுவதற்கான முயற்சியையும் எடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய தற்காலிக நடவடிக்கைகளை அவர்களே எடுத்துக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். அப்படி இல்லை என்றால், அத்தகைய தற்காலிக நடவடிக்கைகள் எடுக்க முயலலாம். தவிர பரிசீலனை என்பது எந்தக் காரியத்தையும் துவங்குவதற்கு முன்னாலே ஒவ்வொருவரும் செய்ய வேண்டிய ஒரு கடமை.

திரு. எஸ். ஆண்டித் தேவர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு 7 ஆண்டு காலமாக விடுதி வசதி இல்லை என்ற குறையைத் தீர்ப்பதற்கு, 7 ஏக்கர் நிலத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பிடித்திருப்பதாக அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்கு அங்கே உணவுவிடுதியும் இல்லை—மிகவும் சிரமப்படுகிறார்கள். வெளியிடங்களில் தங்குவதற்கும் உணவு வசதி பெறுவதற்கும் அவர்களால் முடியாமல் போகிறது. காரணம் மாணவர்கள் என்று சொன்னால், வெளியில் இருப்பவர்களும் யாரும் இடம் கொடுப்பது இல்லை. அதனால், அவர்கள் மிகவும் சிரமப்படுவதை உத்தேசித்து, தனியார் இடங்களிலே அதிகமாக கொடுத்தாவது வாடகைக்கு இடம் பிடித்து மாணவர்களுக்கு உணவு விடுதி அமைக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1981 மார்ச் 2]

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கிற சட்டக்கல் ூரி விடுதி நகரின் மத்தியில் அமைந்து இருப்பதாலும் அந்தச் சட்டக்கல்லூரிக்கு அருகாமை யில் உள்ள பஸ் தொழிலாளர்களுக்கும் மாணவர்களுக்கும் இடையே அடிக்கடி போராட்டம் ஏற்பட்டு...... (பணியடிக் கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக்கேள்வி மதுரை சட்டக் கல்லூரியைப் பொறுத்தது. ஆகவே, இது போன்ற கேள்விகள் அனுமதிக்கப்பெறுவது இல்லை. உட்காருங்கள்.

திரு. எம். எஸ். மாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மதுரைச் சட்டக்கல்லூரியினுடைய மாணவியர் களுக்காக மீனாட்சி மகளிர் கல்லூரியில் தங்கும் விடுதி கட்டப்பட விருப்பதாக அறிகிறேன். அதனாலே அந்த மாணவியர்கள் கல் லூரிக்குச் செல்ல அது வெகு தூரமாக இருக்கிற காரணத்தினால் அவர்களுக்குப் பேருந்து வசதிகளைச் செய்துதர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவியர்களுக்கென தனியாக இடத்தை ஒதுக்கித் தரும்படி மாவட்ட ஆட்சித் தலைவர் கேட் டுக் கொள்ளப்பட்டிருக்கிறார் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

சந்தூர் உயர்நிலைப் பள்ளிக் கட்டடம்

*வினா எண். 328—திரு. பி. எஸ். துரைசாமி : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா;

(அ) சந்தூரில் உள்ள உயர்நிலைப்பள்ளிக்கு கட்டிடம் கட்ட 2 ஏக்கர் நிலம் 10 ஆண்டுகளுக்கு முன் வாங்கப்பட்டதா ?

(ஆ) இந்த இடத்தில் கட்டிடம் கட்டுவதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) இப்பள்ளிக் கென 2 ஏக்கர் நிலம் நன்கொடையாகக் கிடைக்கப்பெற்றது.

(ஆ) இப்பள்ளிக்கு கட்டிடம் கட்டுவது குறித்து பரிசீலனை செய்யும் வகையில், கட்டிடத்திற்கான வரைபடம் மற்றும் மதிப் பீடுகள் பொதுப்பணித்துறையிடமிருந்து கோரப்பட்டுள்ளன. அவைகள் கிட்டியபின் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.